1973 பிப்ரவரி 5]

பரிசீலனை செய்து மாண்புமிகு அங்கத்தினர் திரு. பலராமன் சொன்னது போல, தவறுகள் ஏதும் நடந்துவிடாமல் அவர்கள் பயனடைவதற்கேற்ப திட்டம் வகுக்க அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் சொன்னது போல, தொழில் வளர்ச்சிக்காக நிரந்தரமான முறையில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்ற அளவுக்குத்தான் திட்டங்கள் வகுக்கப்பட்டு பின் பரிட்சார்த்தமாக மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே இந்த ஆண்டு 10 லட்சம் ரூபாய், அடுத்த ஆண்டு 15 லட்சம் ரூபாய், அதற்கு அடுத்த ஆண்டு 20 லட்சம் ரூபாய், அவற்ளேடு நின்றுவிடும். 5 ஆண்டுத் திட்டத்திற்காக தொடர்ந்து மாநில அரசு பொறுப்பு ஏற்றுக் கொள்ளும். அந்த அடிப்படையில் தான் ஆரம்பச் செலவுகளுக்குப் பொறுப்பு வருகிறது. நடைமுறைச் செலவு எவ்வளவு ஆகும் என்பதைக் கணக்கிட்டு, அந்தப் பொறுப்புக்களை ஊராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ளும். இதற்காக வேண்டியவற்றை ஆய்வு செய்து குழுவினர் ஆலோசனை கூற வேண்டும்.

Burma Repatriates.

*7 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether a large number of repatriates are expected in this State from Burma during 1971–72 ; and

(b) the steps taken to rehabilitate them?

பர்மா அகதிகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72 இல் இம்மாநிலத்திற்குப் பர்மா அகதிகள் பலர் வருவரென்று எதிர்பார்க்கப்படுகின்றதா ?

(இ) அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971-72-ல் பர்மாவிலிருந்து 5,490 அகதிகள் வந்துள்ளனர்.

(இ) அகதிகள் வாணிகம் தொடங்குவதற்கும் வேளாண்மை நிலக்குடியேற்றத் திட்டங்களின் கீழ்க் குடியமர்வதற்கும், வீடுகட்டிக் கொள்வதற்கும் கடன் வழங்குதல், அவர்களுக்குத் தொழிற்சாலைகளில் பயிற்சியும் வேலை

வாய்ப்பும் அளித்தல், சொந்தத் தொழில் நடத்த ஏற்பாடு செய்தல் முதலிய வற்றிற்கான திட்டங்கள் ஏற்கெனவே வகுக்கப்பட்டு இந்திய அரசின் நிதி யுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த பர்மா அகதிகளுடைய நிலைமை, வந்தவர்களுடைய நிலைமை இப்போது எப்படியிருக்கிறது என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் ஏதாவது குறிப்பு சொல்ல முடியுமாவென்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் வந்தபோதே அரசாங்கத்திலிருநது உதவிகளெல்லாம் கொடுக்கப்பட்டன. அதிலே பல பேர் அந்தப் பணததை யெல்லாம் இழந்து விட்டு துர்பாக்கியமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி சர்வே மாதிரி ஏதாவது எடுத்து அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா, அரசுக்கு அவர்கள் நிலைமை இப்போது எப்படியிருக்கிறதென்று தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இதற்கென தனியான சர்வே எடுக்கவில்லை. ஆனாலும் பொதுவாக என்னைப் பொறுத்த வரையில், சிலர் இந்தக் கடன்களைப் பெற்று, கடன் எந்த உதவிக்காக அளிக்கப்படுகிறதோ அதற்குப் பயன்படுத்திக்கொண்டு வாழ்வில் முன்னேறி யிருக்கிறார்கள். பெரும்பாலோர் அந்தப் பணத்தை வாங்கி உடனே சொந்தச் செலவிற்குச் செலவழித்து விட்டு, பிறகு தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் எந்தெந்தக் கடன்களுக்கு என்னென்ன தொகை எவ்வாறு கொடுக்க வேண்டுமென்று முறை வகுத்துக் கொடுக்கிறதோ அந்த முறையில் மாநில அரசு கொடுக்கிறது.

Tamil Nadu Prevention of Begging Act, 1945.

* 8 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to enforce strictly the Tamil Nadu Prevention of Begging Act, 1945 in this State ; and

(*b*) if so, the details thereof?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் தமிழ் நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுப் பதைத் தடுக்கும் சட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?